






# ஹர ஹர சங்கரா

FREE COPY
December - 2025
Vol. 5 - ISSUE 02



# KODAMBAKKAM TIMES





# 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மின்னல் தாக்கி துண்டுகளாக வெடிக்கும் லிங்கம்

இந்தியாவில் அதிசயம் நடக்கும் பல கோவில்கள் உண்டு. கோவில்களுக்கு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் நடைபெறும் என்பதை கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால், 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மின்னல் தாக்கி துண்டுகளாக வெடிக்கும் லிங்கம் பற்றி கேள்விப் பட்டிருக்கிறீர்களா?

இப்படிப்பட்ட அதிசய நிகழ்வு நடக்கும் கோவில் ஹிமாச்சல் பிரதேசத்தில் உள்ள பிஜ்லி என்ற மலைமீது மகாதேவ் ஆலயம் ஒன்றில் நடக்கிறது. இது மிகவும் பழமை வாய்ந்த ஆலயமாகும். இக்கோவில் கருவறையில் உள்ள லிங்கத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மின்னல் தாக்கும். இந்த நவீன யுகத்தில் இது மிகவும் ஆச்சர்யமான விஷயம் தான்.

இக்கோவிலைப் பற்றி ஒரு புராணக் கதையும் சொல்லப்படுகிறது. குலந்த் எனும் அரக்கன் மலைப் பாம்பு வடிவம் எடுத்து பூமியில் உள்ள அனைவரையும் துன்புறுத்தி வந்தான். இவன் மத்தனா என்ற கிராமத்திற்கு வந்து அங்கு பாயும் வ்யாஸ் நதியைத் தடுத்து நிறுத்தி விட்டான். இதனால் பல உயிர்கள் நீரில் மூழ்கி மாண்டன. இதனால் கோபமடைந்த சிவபெருமான் அரக்கனை வதம் செய்கிறார். உடனே அரக்கன் பிஜ்லி மலையாக மாறியதாகவும், அதன் மீது மகாதேவ் கோவில் கட்டப்பட்டது என்றும் தெரிகிறது.

பிறகு சிவபெருமான் இந்திரனை அழைத்து பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இக்கோவில் லிங்கத்தை மின்னல் தாக்குமாறு கட்டடையிட்டார். மின்னலின் தாக்குதலால் லிங்கம் மட்டும் தான் உடையும் கோவிலுக்கு எந்த சேதமும் ஏற்படாது.

இக்கோவில் புரோகிதர்கள் உடைந்த லிங்கத்துண்டுகளை சேகரித்து அதோடு கடலைமாவு, பருப்பு மற்றும் உப்பு சேர்க்காத வெண்ணை இவற்றை பசை மாதிரி ஆக்கி உடைந்த லிங்கத்தை ஒன்று சேர்த்து பூசுகின்றார்கள். இது காய்ந்ததும் பழைய லிங்கமாக மாறிவிடும். மின்னல் தாக்கியதும் கோவிலை கொஞ்ச நாட்கள் திறக்க மாட்டார்கள். லிங்கம் நன்றாகக் காய்ந்ததும் பழையபடி அபிஷேகம், ஆராதனை செய்கிறார்கள். இதில் ஆச்சர்யம் என்னவென்றால் லிங்கம் உடைந்த சுவடே தெரியாது.

# கீதை உபதேசிக்கப்பட்ட நாள்

ஜெயந்தி என்பது அவதார புருஷர்கள் மகான்கள் ஆகியோரின் பிறந்த தினத்தை முன்னிட்டு கொண்டாடப்படும் வைபவம். ஆனால் ஞானத்தைப் போதிக்கும் ஒரு நூலுக்கும் இத்தகைய அந்தஸ்து உண்டு. அது பகவத் கீதை. பகவத் கீதை பிறந்த நாள் தான் கீதா ஜெயந்தி எனக் கொண்டாடப்படுகிறது.



குருக்ஷேத்திரத்தில் நடந்த மகாபாரதயுத்தத்தில், துவக்கத்தில் யுத்தம் செய்ய மனம் துவண்ட அர்ஜூனனுக்கு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கீதோ உபதேசம் செய்தது மார்கழி மாதத்தில் வருகின்ற வளர்பிறை ஏகாதசியன்று தான். அந்நாளே கீதா ஜெயந்தி என்ற பெயரில் திருவிழாவாக கொண்டாடப்படுகிறது.

ஹரியானா மாநிலத்தில் உள்ள குருக்ஷேத்திரத்தில் இது பெருந்திருவிழாவாக ஐந்து தினங்களுக்கு கொண்டாடப்படுகிறது. பிரம்மசரோவரத்தில் தீப வரிசைகள் ஒளிர, உள்ளத்தில் ஞான ஒளி வீச வேண்டி கீதையைப் பாராயணம் செய்து ஸ்ரீகிருஷ்ணரை வழிபடுகின்றார்கள்.

குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் முதல்நாள் கௌரவர் படைகளைப் பார்த்ததும் அர்ஜூனனுக்கு குழப்பம் ஏற்பட்டது. "நமது உற்றார், உறவினர், குரு ஆகியோருடன் போரிட்டு அவர்களைக் கொன்று இழந்த ராஜ்ஜியத்தைப் பெறுவது அவசியம்தானா? என்று சிந்தித்தான், மனம் வருந்தினான், காண்டீபத்தைக் கீழே வைத்தவன் தேரோட்டியான கிருஷ்ணரின் முகத்தைப் பார்த்தான். அர்ஜூனன் மனதில் உள்ளதை அறிந்த பகவான், அவனுக்கு உபதேசம் செய்தார். அதுவே "பகவத் கீதை" என்று போற்றப்படுகிறது. மேலும், அர்ஜூனனுக்கு விஸ்வரூபம் காட்டியும்

அருளினார். பகவத் கீதையானது "18" அத்தியாயங்களில் "701" சுலோகங்களாக அமைந்துள்ளது. இவற்றில் மானிடர்கள் அமைதியாக வாழ, கடைபிடிக்கவேண்டிய கர்மம் மற்றும் தர்மம் ஆகியவற்றை பகவான் அருளியுள்ளார்.

"பகவத்" என்றால் இறைவன் "கீதா" என்றால் நல்லுபதேசம். இதற்கு இன்னொரு பொருள் சொல்வதும் உண்டு. "கீதா" என்ற சொல்லை வேகமாகச் சொல்லிக்கொண்டே வந்தால் "தாகீ" என்று மாறும். "தாகீ" என்றால் "தியாகம்" என்று பொருள். வாழ்வில் வரும் சுகதுக்கங்களையும், இன்பதுன்பங்களையும் பகவானிடம் ஒப்படைத்து விடவேண்டும் என்பது இதன் தத்துவமாகும். "துறவு கொள்ளுங்கள், எல்லாவற்றையும் விட்டு விடுங்கள் என்பதும் "கீதா"விற்குரிய ஆழமான பொருளாகும்.

அர்ஜூனன் தன் உற்றார், குருமீது அம்பெய்யத் தயங்கியபோது "தர்மத்தைக் காக்க அவர்களை அழிப்பதில் தவறில்லை. அதற்குரிய பலன்கள் என்னையே சேரும்" என்று கிருஷ்ணர் அருளினார். எந்தச் செயலைச் செய்தாலும் அதன் பலனை இறைவனுக்கே அர்ப்பணித்துவிடவேண்டும் என்பதே கீதையின் பொருள். எனவேதான் கீதை இந்துக்களின் ஐந்தாவது வேதமாகப் போற்றப்படுகிறது. பகவான் அர்ஜூனனுக்கு உபதேசித்தபின் எந்த பிரதிபலனையும் பற்றிக் கருதாமல் தன் கடமையைச் செய்தான். எதிரி திசையிலிருக்கும் கௌரவர்கள்மீது சரமாரி அம்புகள் எய்தான் கௌரவர்கள் வீழ்ந்தார்கள்.

பகவத் கீதை ஜெயந்தி மார்கழி வளர்பிறை ஏகாதசியாகும். தென் பாரதத்தில் கார்த்திகை வளர்பிறை ஏகாதசியே கீதா ஜெயந்தி ஆகும்.

எத்தகைய துன்பத்தில் இருப்போரும் பகவத் கீதையை ஒரு முறை பாராயணம் செய்ய, தெளிவு பெறுவது நிச்சயம். இறைவனின் அமுதவாக்காக வெளிவந்த பகவத் கீதையை, இறைவனுக்குச் சமமாக வழிபடுகின்றோம். உபநிஷதங்களில் இருக்கும் அரிய கருத்துக்களின் சாராம்சமே பகவத் கீதை.

SREE MANGALAGURU
JOTHIDA NILAYAM
'VAAZHVIL VELICHAM'
SURESH MADHAVAN
93609 45818
(With Appointment Whatsup Only)

**கீதா சாரம் :**

எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடந்தது

எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது

எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்

உன்னுடையதை எதை இழந்தாய், எதற்காக நீ அழுகிறாய்?

எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?

எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?

எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.

எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது

எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றோருவருடையதாகும். இதுவே உலக நியதியும் எனது படைப்பின் சாராம்சமாகும்.

கீதா ஜெயந்தி அன்று பகவான் ஸ்ரீகிருஷ்ணருக்கும், கீதை நூலுக்கும் பூஜைகள் செய்து, மலரிட்டு வணங்கி நம்மால் இயன்றவரை பகவத் கீதையைப் பாராயணம் செய்வோம்.

ஸ்ரீ க்ருஷ்ணா உன் திருவடிகளே சரணம்


You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

# KODAMBAKKAM TIMES

MAMBALAM & T NAGAR EDITION

COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar

K K NAGAR & VADAPALANI EDITION

COVERING AREA :

Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam

044 2484 4114 / 93826 82128 / 89390 70034

E-mail : kodambakkamtimes@yahoo.com



# சொர்க்கவாசல் இல்லாத திவ்ய தேச கோவில்கள் பற்றி தெரியுமா?

108 திவ்யதேசங்களில் பெரும்பாலும் சொர்க்கவாசல் எனப்படும் பரமபதவாசல் இருக்கும். ஆனால் கும்பகோணம் ஸ்ரீ சாரங்கபாணி ஆலயத்தில் சொர்க்கவாசல் எனப்படும் பரமபதவாசல் கிடையாது. இதற்கு காரணம் இருக்கிறது.

இத்தலத்து சுவாமி நேரே வைகுண்டத்திலிருந்து இங்கே வந்தார். மகாலட்சுமியின் அவதாரமான கோமளவல்லியை மணமுடிப்பதற்காக திருமால் தான் எழுந்தருளியுள்ள ரதத்துடன் வைகுண்டத்தில் இருந்து இங்கு வந்து கோமளவல்லியை மணந்து கொண்டார். எனவே இவரை வணங்கினாலே பரமபதம் (முக்தி) கிடைத்துவிடும் என்பதால் இந்த ஆலயத்தில் சொர்க்கவாசல் கிடையாது.

மேலும் இங்குள்ள உத்ராயண, தெட்சிணாயன வாசலைக் கடந்து சென்றாலே பரமபதம் கிட்டும் என்ற நம்பிக்கையும் உள்ளது. உத்ராயண வாசல் வழியே தை முதல் ஆனி வரையும், தெட்சிணாயன வாசல் வழியே ஆடி முதல் மார்கழி வரையும் சுவாமியை தரிசிக்க செல்ல வேண்டும். ஏதாவது ஒரு வாசல் தான் இங்கு திறக்கப்பட்டிருக்கும்.

**இதே போன்று சொர்க்கவாசல் எனப்படும் பரமபதவாசல் இல்லாத கோவில்கள் :**

1. காஞ்சிபுரம் பரமேஸ்வர விண்ணகரம் எனப்படும் ஸ்ரீ பரமபதநாதப் பெருமாள் ஆலயம். இவ்வாலய மூலவரின் திருநாமம் ஸ்ரீவைகுண்டப் பெருமாள் என்றாலும் இங்கு சொர்க்கவாசல் உத்ஸவம் கிடையாது. இப்பெருமாளுக்கு பரமபதநாதன் என்ற திருநாமமும் உண்டு.

2. ராமானுஜர் அவதரித்த தலமான ஸ்ரீபெரும்புதூர் ஆதிகேசவப் பெருமாள்

ஆலயம். ஸ்ரீபெரும்புதூரை நித்ய சொர்க்கவாசல் தலமாக கருதுகிறார்கள். எனவே இந்த ஆலயத்தில் சொர்க்கவாசல் கிடையாது. வைகுண்ட ஏகாதசியன்று ஆதிகேசவப் பெருமாளும், ராமானுஜரும் பூதக்கால் மண்டபத்திற்கு எழுந்தருளும்போது மணிக்கதவுகள் சொர்க்கவாசல் திறக்கப்படுவதுபோல திறக்கப்படும்.

3. திருக்கண்ணபுரம் ஸ்ரீ சௌரிராஜபெருமாள் ஆலயம் பூலோகத்து விண்ணகரம் என்பதால் இத்திருக்கோவில் பரமபதவாசல் கிடையாது. இவரது திருக்கோவிலே பரமபதமானதால் மற்ற வைணவக்கோவில்களில் உள்ளது போன்று வைகுண்டவாசல் இங்கு இல்லை.

4. திருச்சி அருகே உள்ள திருவெள்ளறை புண்டரீகாச பெருமாள் கோவிலில் ஸ்ரீதேவியை மணமுடிப்பதற்காக பெருமாள் வைகுண்டத்தில் இருந்து நேராக வந்ததால் இக்கோவில் பூலோக வைகுண்டமாக திகழ்கிறது. இங்கும் குடந்தை ஸ்ரீ சாரங்கபாணி கோவிலில் உள்ளது போன்று தட்சிணாயன வாசல், உத்தராயண வாசல் என இரு வாசல் உள்ளது. அந்த வாசலைக் கடந்து சென்றாலே பரமபதம் கிட்டும் என்ற நம்பிக்கையும் உள்ளது.

# மார்கழி புதன்கிழமையை தவற விடாதீர்கள்

மார்கழி மாதத்தில் வரும் முதல் புதன்கிழமையை தவற விடாதீர்கள். அன்று அதிகாலை 4.30 மணிக்கு குசேலர் கண்ணனை சந்தித்த நேரம்.

புதன்கிழமையன்று அதிகாலை 4.30 மணிக்கு இரண்டு புறமும் சிறு அகலில் நெய் விளக்கு ஏற்றி, நாராயணீயத்தில் (87 தஸகம்) குசேலோ பாக்கியானம் 11 முறை பாராயணம் செய்து பின்பு கிருஷ்ணாஷ்டகம் சொல்லத் தெரிந்தவர்கள் சொல்லி கிருஷ்ணனை வணங்குபவர்களுடைய வீட்டில் செல்வம் மற்றும் உணவுப் பொருட்களுக்கு எந்த காலத்திலும் பஞ்சம் ஏற்படாது என்பது கண்ணனின் கூற்று.



குருவாயூர் கோவிலில் இந்த நிகழ்வு மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இந்த நன்னாளை பயன்படுத்தி எல்லோரும் பலன் பெற கண்ணன் அருள் புரியட்டும்.

# முதுகுவலிக்கு காஞ்சி பெரியவா சொல்லும் மருந்து

பெரியவாளுக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டு ரொம்ப கஷ்டப்பட்டு எழுந்தார் ஒரு பக்தர். நடு முதுகுத்தண்டில் தாங்க முடியாத வலி.

"நடு முதுகுல ... பயங்கர வலி பெரியவா... எல்லா வகை வைத்தியமும் பாத்தாச்சு ஒண்ணும் கேக்கல, பணம் கரைஞ்சது தான் மிச்சம். வலி போகல, பெரியவாதான் இத குணப்படுத்தணும் என்றார். அவர் முகத்தில் வேதனை தெரிந்தது.



உடனே பெரியவாள் "முன்னெல்லாம் செக்குல ஆட்டின நல்லெண்ணெய் தேச்சு, கொஞ்சம் ஊற வச்சு, வெந்நீர்ல சீக்காயோ, அரப்போ தேச்சு குளிப்பா. இப்போ அவசர யுகம் எண்ணெய் தேச்சு குளிக்கவே டைம் இல்ல. "சனி நீராடு"ன்னு ஸ்கூல்ல படிக்கறதோட செரி. அத follow பண்ணணும்கறது மறந்து போச்சு. அரப்பு, சீயக்கா பொடிக்கு பதிலா, தலைக்கு தேச்சுக்க என்னென்னமோ வந்திருக்காம் எல்லாம் கெமிக்கல்ஸ் சேர்ந்தது. பின்னால கெடுதின்னு தெரிஞ்சாலும் அதையேதான் வாங்கறா, போகட்டும் போ, நீ இனிமே ரெகுலரா எண்ணெய் தேச்சுண்டு வெந்நீர்ல குளி, மிளகு ரசம், பெரண்டை துவையல் பண்ணி சாப்பிடு என்ன என்றார்.

"கட்டாயம் பெரியவா சொன்னபடியே பண்றேன்" என்றார் அந்த பக்தர். மூணு மாதம் கழித்து வந்தார் முதுகுவலிக்காரர் வலி போய்விட்டதாம்.

எண்ணெய் தேச்சு வெந்நீர்ல குளியல், மிளகு ரசம், பெரண்டை துவையல் இந்த மூன்றின் சேர்க்கை பற்றி யார் ஆராய்ச்சி பண்ணினால் என்ன, பெரியவா சொன்ன சிம்பிள் வைத்தியம் கை மேல் பலன் கொடுத்திருந்தது.

பெரியவா திருவாக்கிலிருந்து சில health tips.

வீடுகள்ல, மூணு எண்ணெய் எப்பவும் இருக்கணும் அவை

1. நல்லெண்ணெய் : விளக்கேத்த, சமையல் பண்ண, எண்ணெய் தேச்சு குளிக்க.

2. விளக்கெண்ணெய் : வருடத்தில் ரெண்டு தரம், காலைல வெறும் வயித்துல குடிச்சா வயிறு செரியா இருக்கும். வயித்துவலி இருந்தா கொஞ்சம் விளக்கெண்ணெய் எடுத்து தொப்புளை சுத்தி நன்னாத் தடவிண்டா செரியாப் போய்டும், சூடு தணியும். பாதத்ல வெடிப்பு, கிடிப்பு, புண்ணு இதெல்லாம் வராது.

3. வேப்பெண்ணெய் : வேப்பெண்ணையை தெனமும் கை, கால், முட்டிகள்ல தடவிண்டா முட்டி வலி வரவே வராது. (பெரியவாளும் தினமும் கை, கால் முட்டியில் வேப்பெண்ணெய் தடவிக்கொண்டு குளிப்பாராம்)

தெனமும் குளிச்சதும் ரெண்டு காலையும், பாதத்தையும் நன்னாத் தொடச்சுக்கணும். நம்ம ஒடம்புல காலுதான் முக்கியமான பாகம். பாதத்தை நன்னா கவனிச்சுண்டா ஒடம்பும் நன்னா இருக்கும். ராத்திரி படுத்துக்கறதுக்கு முன்னாடி பாதத்தை நன்னா அலம்பிண்டு, ஈரம்போகத் தொடச்சிண்டு படுத்துக்கணும்.

அந்த காலங்கள்ல வெளியிலேர்ந்து வந்தா குடிசைவாசிகள் கூட வாய் கொப்பளிச்சுட்டு கை, கால், குதிகால் அலம்பிண்டு தான் வீட்டுக்குள்ளயே நொழைவா.

இப்போ ...? செருப்பே ... வீட்டுக்குள்ளதான கெடக்கு. பின்ன ஏன் வியாதி வராது? என்று கூறுகிறார் மஹா பெரியவாள்.

ஓம் ஸ்ரீ மஹா பெரியவா சரணம்

---

# மோக்ஷதா ஏகாதசியின் பெருமைகள்

பாபங்களை நீக்கி பரமனடி சேர்க்கும் மோக்ஷதா ஏகாதசி கீதா ஜெயந்தி என்றும் கொண்டாடப்படுகிறது. மோக்ஷதா ஏகாதசி என்பது பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையிலான போருக்கு முன்பு ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு பகவத் கீதையை வழங்கிய நாளாகும்.

ஜோதிஷா தீர்த்தம் என்று அழைக்கப்படும் இடத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் தனது சொந்தக் குடும்பத்திற்கு எதிராகப் போருக்குச் செல்வதில் சந்தேகம் கொண்ட அர்ஜுனனிடம் பகவத் கீதையில் ஆவணப்படுத்தப்பட்ட வசனங்களைப் பேசினார்.

ஒருவருக்கு பகவத் கீதையை பரிசளிக்க மோக்ஷதா ஏகாதசி சிறந்த நாள் என்று நம்பப்படுகிறது. ஏனெனில் ஸ்ரீகிருஷ்ணர் கொடுப்பவர் மற்றும் பெறுபவர் இருவருக்கும் தனது ஆசிகளைப் பொழிகிறார். எனவே இந்த புனிதமான நாளில் பகவத் கீதைகளை பரிமாறிக்கொள்வதை ஊக்குவிப்போம்.

ஏனெனில் இது கீதை உயிர்பெற்ற நாள் மட்டுமல்ல, ஸ்ரீகிருஷ்ணரே நம் மீது



கருணையை அருளி ஆசீர்வதிக்கப்பட்ட நாள்.

இந்த மோக்ஷதா ஏகாதசியின் பெருமைகளைப் பற்றி பிரம்மாண்ட புராணத்தில் பகவான் கிருஷ்ணருக்கும், யுதிஷ்டிரருக்கும் இடையிலான உரையாடலில் விவரிக்கப்பட்டுள்ளது.

ஒரு முறை யுதிஷ்டிரர் பகவான் கிருஷ்ணரிடம் கேட்டார். கிருஷ்ணா கார்த்திகை மாத வளர்பிறையில் தோன்றக் கூடிய ஏகாதசியின் பெயர் என்ன? மேலும் இந்த ஏகாதசியை அனுஷ்டிக்கும் வழிமுறைகளைப் பற்றி விவரமாக எனக்கு கூறுங்கள் என்று.

பகவான் கிருஷ்ணர் கூறினார், இந்த ஏகாதசியின் பெயர் மோக்ஷதா ஏகாதசி. இந்த ஏகாதசி ஒருவரின் அனைத்து பாவ விளைவுகளையும் அழிக்கிறது. இந்த ஏகாதசியன்று ஒருவர் துளசி மொட்டுகளால் முழு முதற்கடவுளை வழிபட்டால் பகவான் மிகவும் மகிழ்ச்சியடைவார். இந்த ஏகாதசியை அனுஷ்டிப்பதால் ஒருவர் வாஜ்பேய யாகத்தின் பலனை அடைவார்.

ஒருநாள் வைகானசா மன்னர் ஒரு கனவு கண்டார் அதில் தன் தந்தை நரகத்தில் விழுந்து பற்பல இன்னல்களுக்கு ஆளாகியிருப்பதைக் கண்டார். இதனைக் கண்டவுடன் மன்னர் ஆச்சர்யத்தில் திகைத்தார். மறுநாள் கற்றறிந்த அந்தணர்களின் சபையில் மன்னர் தன் கனவில் கண்டதை வெளிப்படுத்தினார்.

நரகத்திலிருந்து தன்னை விடுவிக்குமாறு தன் தந்தை தன்னிடம் வேண்டியதையும் மன்னர் எடுத்துரைத்தார். கனவு கண்ட நாளில் இருந்து மன்னர் நிம்மதியற்றிருந்தார். ஆட்சி புரிவதில் விருப்பமோ, மகிழ்ச்சியோ அவரால் உணர முடியவில்லை.

அவர் தன் குடும்பத்திலும் சற்று வித்தியாசமாக நடந்து கொண்டார். தன் தந்தை நரகத்தில் துன்புற்று இருக்கும்போது தன் வாழ்க்கை, இராஜ்ஜியம், செல்வம், பலம் மற்றும் செல்வாக்கு ஆகிய அனைத்தும் பயனற்றதே என எண்ணினார்.

ஆகையால், அனைத்து கற்றிந்த அந்தணர்களிடத்திலும் பரிதாபமாக

வேண்டினார். தயவுசெய்து என் தந்தையை நரகத்தின் பிடியில் இருந்து விடுவிப்பதற்கான வழி முறையைக் கூறுங்கள் என்றார். இந்த வேண்டுகோளைக் கேட்ட அந்தணர்கள் கூறினார்கள் மன்னா பர்வத முனிவரின் ஆசிரமம் அருகிலேயே உள்ளது. அவர் கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் வருங்காலத்தையும் அறிந்தவர். ஆகையால் நீங்கள் கனவில் கண்டதை அவரிடம் கூறுங்கள் என்றனர்.

அதை கேட்ட வைகானசா மன்னர் தன் சகாக்களுடன் பர்வத முனிவரின் ஆசிரமத்திற்குச் சென்றார். தன் இராஜ்ஜியத்தின் நலனை விசாரித்த பர்வத முனிவரிடம் மன்னர் நாங்கள் அனைவரும் நலம். ஆனால் இராஜ்ஜியமும், செல்வமும் இருப்பினும் நான் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியிருக்கிறேன். உண்மையில் என் மனதில் ஒரு சந்தேகம் எழுந்தது அதனை நிவர்த்தி செய்வதற்காகத்தான் இங்கு வந்துள்ளேன் என்றார்.

மன்னரிடம் நிகழ்ந்தவை அனைத்தையும் கேட்ட முனிவர் ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்தார். சிறிது நேரத்திற்கு பிறகு முனிவர் தியானத்திலிருந்து விடுபட்டு மன்னரிடம் கூறினார்.

மன்னா உன் தந்தை தன் முற்பிறவியில் அதிகமாக காம இச்சை கொண்டிருந்தார் அதன்விளைவாக ஏற்பட்ட பலனால்தான் அவருக்கு இந்த நிலை ஏற்பட்டது. இப்பொழுது நீங்கள் அனைவரும் கார்த்திகை மாத வளர்பிறையில் தோன்றக்கூடிய ஏகாதசி விரதத்தை அனுஷ்டிப்பாயாக. அதன் பலனால் உன் தந்தை நரக வாழ்க்கையின் பிடியில் இருந்து விடுபடுவார் என்று கூறினார்.

முனிவரின் இந்த வார்த்தைகளைக் கேட்ட பிறகு மன்னர் தன் பரிவாரத்துடன் அரண்மனைக்குத் திரும்பி மன்னர் தன் மனைவி, பிள்ளைகள் மற்றும் உதவியாளர்களுடன் கார்த்திகை மாத வளர்பிறையில் தோன்றக்கூடிய இந்த ஏகாதசி விரதத்தை அனுஷ்டித்து அதன் மொத்த பலனையும் துன்பத்திற்காளான தன் தந்தைக்கு அர்ப்பணித்தார்.

அதன் விளைவாக மன்னரின் தந்தை சுவர்க்க லோகத்தை அடைந்து மன்னரை

---

குரு சரணம் குரு நாதா சரணம்

# கார்த்திகை மாத சிறப்புகள்

கார் காலமான கார்த்திகை மாதத்தில் காந்தள் மலர்கள் அதிகளவு பூப்பதால் தான் இம் மாதம் கார்த்திகை மாதம் என பெயர் பெற்றதாக கூறுவார்கள்.

சரண கோஷத்துடன் தொடங்கும் கார்த்திகை மாதமானது மன இருளை




அகற்றி ஆன்மீக வழிபாட்டின் மூலம் வாழ்வில் ஒளியை கொடுக்கும் மாதமாகும். தீப வழிபாடு என்றவுடன் நமக்கு முதலில் நினைவில் வருவது கார்த்திகை தீப ஒளி திருநாளாகும். ஆனால் கார்த்திகை மாதத்தில் இவை மட்டுமல்லாது முருகன், ஐயப்பன், சிவன், விஷ்ணு என அனைத்து தெய்வங்களையும் வழிபடும் சிறந்த மாதமாக உள்ளது. அச்சிறப்பினை நாம் அறிந்து கொள்வோம்.

1. திருமால், பிரம்மா உட்பட முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் சிவபெருமான் ஜோதி வடிவாக காட்சியளித்த நாள் தான் திருக்கார்த்திகை தீப விழாவாக கொண்டாடப்படுகிறது. இத் திருநாள் கார்த்திகை மாதம் பவுர்ணமி மற்றும் கார்த்திகை நட்சத்திரம் ஒன்று சேரும் தினத்தில் கொண்டாடப்படுகிறது. இவ்வாண்டு திருக்கார்த்திகை 3.12.25 (புதன்) அன்று கொண்டாடப்படவுள்ளது. திருவண்ணாமலை உச்சியில் ஏற்றப்படும் மகா தீபத்தை காண பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருவார்கள்.

கார்த்திகை தீபத்திற்கு முதல் நாள் பரணி நட்சத்திர நாளில் பரணி தீபம் ஏற்றி வழிபாடு செய்பவர்கள் அறிந்தும், அறியாமலும் செய்த பாவங்களில் இருந்து விடுபட்டு எம பயம் நீங்கி நலமுடன் வாழ்வார்கள்.

2. கார்த்திகை மாத சோமவாரம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். அந்நாளில் சிவலிங்கத்திற்கு நெய் அபிஷேகம் செய்து வில்வ இலையால் அர்ச்சனை செய்து வழிபட்டால் குடும்பத்திற்கு சகல நன்மைகளும் உண்டாகும்.

3. இம் மாதத்தில் நாள் தோறும் சூரிய உதயத்தின் போது நீராடினால் பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடிய பலன் கிடைக்கும்.

4. கார்த்திகை மாதம் முழுவதும் வீடுகளில் தீபம் ஏற்றி வழிபட்டால் அனைத்து மங்களமும் கிட்டும். இவ்வாறு தீபம் ஏற்ற இயலாதவர்கள் சதுர்த்தசி, பவுர்ணமி, துவாதசி போன்ற நாட்களிலாவது ஏற்றி பலன் பெறலாம்.

5. சிவனின் நெற்றிக் கண்ணில் தீப்பொறியாக தோன்றி சரவண பொய்கையில் குழந்தையாக முருகப் பொருமான் தோன்றிய மாதமாகும் கார்த்திகை மாதம். முருகனின் அறுபடை வீடுகளுக்குச் சென்று இம் மாதத்தில் வழிபட்டால் அனைத்து வளங்களையும் வாழ்வில் பெறலாம். முருகனுக்கு சந்தன அபிஷேகம் செய்து

வழிபட்டால் குழந்தை பாக்கியம் கிட்டும்.

6. மலர் மாலைகள் சார்த்தி விஷ்ணு பகவானை இம் மாதத்தில் வழிபட்டால் மோட்ச நிலையை பெற முடியும். துளசி இலைகளை கொண்டு அர்ச்சனை செய்வது அஸ்வமேத யாகம் செய்யும் பலனளிக்க வல்லது.

7. குற்றாலத்தில் கோயில் கொண்டுள்ள குற்றாலநாதரையும், குழல்வாய் மொழி அன்னையையும் கார்த்திகை மாதம் திங்கட்கிழமையில் நீராடி வழிபட்டால் நம் வாழ்வின் இடர்கள், பாவங்கள் அழியும் என்பது நம்பிக்கை.

8. திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் கார்த்திகை தீபத்தன்று 27 நட்சத்திரங்களை மையமாக வைத்து தீபாராதனைகள் நடைபெறும். இதனை மடக்கு தீபாராதனை என்று அழைப்பார்கள்.

9. கார்த்திகை பவுர்ணமியன்று திருவண்ணாமலையை தேவர்களும், முனிவர்கள், ரிஷிகள், இந்திரன், வருணன், வாயு, குபேரன், யமன் ஆகியோர்கள் வலம் வருவதுடன், மகாவிஷ்ணு மகாலட்சுமியுடன் வலம் வந்திருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன.

10. கார்த்திகை மாத பஞ்சமி தினமானது நாகதோஷ நிவர்த்தி செய்ய உகந்த நாளாகும். கார்த்திகை உமா மகேஸ்வர விரதமானது பிரிந்த தம்பதியர் இடையே புரிதல் ஏற்பட்டு ஒற்றுமை உண்டாக்கும்.

11. கார்த்திகை மாத பவுர்ணமி தினத்தில் கிரி வலம் வருவது மிகவும் சிறப்பானதாகும். அவ் வேளையில் மழை பெய்து அதில் நனைந்தால் தேவர்கள் ஆசிகிட்டும்.

12. சென்னை திருவெற்றியூர் ஆதிபுரீஸ்வரர் கோயில் புற்று வடிவிலான சுயம்புலிங்கத் திருமேனிக்கு புனுகுத் தைலம் சாத்தி கவசம் போட்டிருப்பர். கார்த்திகை பவுர்ணமி தொடங்கி 3-நாட்கள் மட்டும் இங்கு கவசம் இல்லாத ஈசனை தரிசிக்கலாம்.

13. குருவாயூரப்பன் கோவிலில் கார்த்திகை மாத சுக்லபட்ச ஏகாதசியை ஒட்டி நடத்தப்படும் உற்சவம் தனி சிறப்பு மிக்கது. இந்நாளில் காசி, பத்ரி, சபரிகிரி திருத்தலங்கள் தீர்த்தங்களின் மகிமையும், கங்கை, யமுனை உள்ளிட்ட நதிகளும் குருவாயூரில் ஒருங்கே கூடுவதாக ஐதீகம்.

14. கார்த்திகை மாதம் லட்சுமி ப்ரபோதன தினத்தன்று மாலை லட்சுமி பூஜை செய்வதன் மூலம் இழந்த செல்வத்தை மீண்டும் பெறலாம்.

15. இம் மாதத்தினை திருமண மாதம் என்றும் கூறுவார்கள். ஏனென்றால் சூரிய பகவான் இம் மாதத்தில் விருச்சிக ராசியில் சஞ்சரிக்கிறார். இதனால் மன சேர்க்கை, கர்ப்ப தானம் ஆகியவற்றில் பிரச்சனைகள் உண்டாகாது.

அனைத்து தெய்வங்களுக்கும் உரிய வழிபாட்டை தன்னுள்ளே கொண்டுள்ள கார்த்திகை மாதத்தில் நாமும் வழிபட்டு அருள் பெறுவோம்.

ஹேமலதா க்ருஷ்ணகுமார்



# தீர்க்கப்படாத ரகசியம்

தண்ணீரில் விளக்கு எரியும் அற்புதமான கோயில்... எங்குள்ளது தெரியுமா? உண்மையான மனதோடு கடவுளை வணங்கினால் கடவுள் உங்கள் துக்கங்களை எல்லாம் நீக்குவார் என்று கூறப்படுகிறது. இன்று நாம் இந்தியாவில் ஒரு கோயில் பற்றி பார்க்கப் போகிறோம். இந்த கோயிலில் நீரில் விளக்குகள் எரிகின்றது. இந்த விஷயத்தை நம்புவது கடினம். ஆனால் இது உண்மைதான். இந்த அதிசயத்தைக் காண ஒவ்வொரு ஆண்டும் ஏராளமான மக்கள் வருகின்றனர்.

மத்திய பிரதேசத்தின் காடியா காட்டில் உள்ள மாதா ஜி கோயில் இதுபோன்ற ஒரு அற்புதமான கோயிலாகும். இந்த எரியும் விளக்கைக் காண மக்கள் திரண்டு வருகிறார்கள். கடந்த 50 ஆண்டுகளாக இந்த கோவிலில் தண்ணீரில் விளக்கு ஏற்றப்படுவதாக இங்குள்ள மக்கள் நம்புகின்றனர்.



ஒரு நாள் இரவு மாதாஜி கோயில் பூசாரி கனவில் வந்து காளிசிந்த ஆற்றில் இருந்து தண்ணீர் எடுத்து வந்து விளக்கில் ஊற்றி கோவில் விளக்கை ஏற்றும்படி கேட்டுக் கொண்டார் என்று நம்பப்படுகிறது. மறுநாள் காலையில் பூசாரி நதி நீரை விளக்கில் ஊற்றி விளக்கை ஏற்றியபோது விளக்கு உண்மையில் எரிந்ததாம். இதைக் கண்ட கிராம மக்கள் ஆச்சரியப்பட்டனர் எனவே அன்று முதல் இன்றுவரை நெய் அல்லது எண்ணெய் இல்லாமல் தண்ணீரிலேயே விளக்கு எரிகிறது என்று கூறப்படுகிறது.

# KRISHNA DELISH COFFEE




## எங்களிடம் தரமான காபி
## கொட்டை அரைத்து தரப்படும்
## 1 கிலோ காபி பவுடர்
## ரூ 920 மட்டுமே

* Condition Apply

---

## நம்ம ஆத்து காபி

## FILTER COFFEE RS. 20 only

**COFFEE POWDER DOOR DELIVERY FREE ALSO AVAILABLE**

No. 1 & 2 Murthy Street,
Arya Gowda Road, West Mambalam,
Next to Ayodhya Mandabam. Ch-33.

Ph : 9941578181
7010878478

Mylapore Ganapathy's
CELEBRATING
83 Years
ANNIVERSARY
Since 1942

மயிலாப்பூர்
# கணபதிஸ்
ஸ்தாபிதம் 1942

## வெண்ணெய் & நெய்

### பாரம்பரியமாக 1942 முதல்

ஊத்துக்குளி வெண்ணெய் • ஊத்துக்குளி நெய்
மர செக்கு எண்ணெய் • அப்பளம் வகைகள் • பொடிகள்
உடனடி மிக்ஸ் • ஊறுகாய் வகைகள் • தொக்கு வகைகள்
இனிப்பு வகைகள் • கார வகைகள் • வடாம் • வத்தல்
உலர் பழங்கள் • ஸ்பைசஸ் • பேக்கரி வகைகள்
ஊர் ஸ்பெஷல்ஸ் • சீர் பட்சணம்

**மயிலாப்பூர் கிளை :**
# 14, சித்திரைக்குளம் மேற்கு தெரு,
[பி. கே. மஹால் கல்யாண மண்டபம் அருகில்]
மயிலாப்பூர், சென்னை - 600 004
போன் : 044 - 2464 0292, 89390 27272

**மேற்கு மாம்பலம் கிளை :**
# 50, ஆர்ய கவுடா ரோடு,
[ ஷோபனா கல்யாண மண்டபம் அருகில்]
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033
போன் : 044 - 4856 6363, 89390 36363

கருத்துக்களை தெரிவிக்க : 044 – 4856 6781 | வாட்ஸ் அப் : 73581 56781
மின்னஞ்சல் : info@mylaporeganapathys.com

ஆன்லைன் ஆர்டர்கள் www.mylaporeganapathys.com